**புத்தசாசன நிதியத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2024**

---

புத்தசாசன நிதியத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதியச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்ற நிதியத்தின் செயற்பாட்டு நிலைமை தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) (ஈ) பிரமாணத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 மே 22 ஆந் திகதி நடைபெற்ற 89 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தின் போது பத்திர இலக்கம் 89/16 இன் மூலம் பிக்குகள் மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் பிக்குகள் மற்றும் 23 தசசில் மாத்தாக்களுக்கு 2024 யூன் முதல் திசெம்பர் வரை மாதம் ஒன்றுக்கு ரூபா 5,000 வீதம் | அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு ஆளுகைச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஆவணப்படுத்தப்பட்ட பதிவேடுகளில் கொண்டுவரப்பட்ட மாதத்தில் இருந்து கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. 2024 மே முதல் பிக்குகள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் | படிகள் செலுத்துவதற்காக ஆளுகைச் சபை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் உரிய பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 17 பேர்களுக்கு அங்கீகாரம் இன்றி ரூபா 5,000 வீதம் ரூபா 85,000 மே மாதம் வரையும் செலுத்தப்பட்டிருந்தது. | 2024 யூன் மாதம் முதல் செலுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு செய்தல் மே மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டமையால் இந்தக் கொடுப்பனவுகள் இந்த ஆண்டின் கொடுப்பனவுகளில் கழித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப் படாத கணக்காய்வு சான்றிதழ் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 264 (1) இன் பிரகாரம் சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காவும் மொத்தமாக பெறப்பட்ட தொகைக்கு உரிய நபரிடம் இருந்து பெறப்பட்ட, தேவையான இடத்து உரிய பிரகாரம் முத்திரை இட்டு பற்றுச்சீட்டில் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது நிதியத்தால் கொடுப்பனவு செய்யப்பட்ட 141 உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக உரிய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 48,139,056 | அடியிதழ்கள் | எதிர்காலத்தில் சகல கொடுப்பனவுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 264(1) இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளுக்காவும் உறுதிப்படுத்தல் பெறப்படல் வேண்டும். |

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**2.3.1 முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதியத்தின் பதவியணியினருக்கு புறம்பாக புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் புத்தசாசன பிரிவிற்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது 13 சந்தர்ப்பங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 1,000,000 ஆன முற்பணத் தொகை, முற்பண பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. | பதவிநிலை உத்தியோகத்தர்கள் இருவர் மாத்திரம் இருந்தமையால் ஆகக் கூடிய முற்பணம் பெற்றுக்கொள்ளல் ரூபா 2 இலட்சத்திற்கு வரையறுக்க வேண்டி ஏற்பட்டதுடன் அந்த தொகை சில நிகழ்ச்சித் திட்டங்களின் போது போதியளவாக இல்லாமையின் அடிப்படையில் நிதியத்திற்கு உரித்தான புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் மூலம் முற்பணம் பெறப்பட்டதுடன் எதிர்காலத்தில் இந்த நிலைமையைக் குறைத்து நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய பொறுப்புக்கள் கையளிக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் செலுத்தாது இருத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உப பிரிவு | நிதியத்தின் வருமானம் மற்றும் கால ரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் புத்தகம் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கு உரிய பொதுப் பேரேடு உள்ளடக்கிய உரிய கணக்குகளின் குறைபாடுகள் எதிர்காலத்தில் சரி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் புத்தங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 135 | 2024 ஆம் ஆண்டிற்காக நிதியத்தின் நிதிக்கட்டுப்பாடு தொடர்பான பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 135 இன் கீழ் 2025 இன் நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிகள் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 395 | 2024 ஆம் ஆண்டுக்கு உரிய வங்கி இணக்கக் கூற்று 2025 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 877(2)(இ) இன் கீழ் வருகின்ற | நியதிச் சட்ட நிதியங்களில் கிடைக்கின்ற சகல பிரிவினர்கள் மற்றும் | 2024 ஆம் ஆண்டுக்கு உரிய பொதுப் பேரேடை உள்ளடக்கி | உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டி 04 இன் 1 ஆம் பிரிவு | நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் முறையாக மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான உபாய பயன்பாட்டு பேரேடுகள், ஆரம்ப ஏடுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கு உரிய ரூபா 80,406,085 வருமானம் மற்றும் ரூபா 60,574,208 ஆன செலவினங்களுக்கு உரிய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்காக இரட்டை பதிவு முறையில் பொதுப் பேரேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | உரிய கணக்குகள் குறைபாடுகளில் எதிர் காலத்தில் சரி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 877(2)(இ) இன் கீழ் வருகின்ற வழிகாட்டி 04 இன் 3 ஆம் பிரிவு | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நிதியத்தின் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யக் கூடிய வகையில் நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பான காலாண்டு ரீதியான அறிக்கை (வங்கி இணக்கக் கூற்று தயாரித்தலின் செயல் முன்னேற்றம் தொடர்பான காலாண்டு ரீதியான அறிக்கை, பாதீட்டு இலக்கு அடைந்து கொள்ளப்பட்டதா என்பது தொடர்பான அறிக்கை, செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உரிய காலாண்டு ரீதியான செயல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை) தயாரித்து காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் அரச நிதித் திணைக்களத்திற்கும், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கும் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்க பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக அந்த அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காலாண்டு ரீதியான அறிக்கை தயாரித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | புத்தசாசன நிதியத்தால் பயன் படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கு இடையே சில சொத்துக்கள் நிதியத்தால் கொள்வனவு செய்யப்பட்டதுடன் சில சொத்துக்கள் அமைச்சுக்குச் சொந்தமானதாகும். அதன் பிரகாரம் நிதியத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் புத்தசாசன அமைச்சுக்குரிய சொத்துக்கள் தனிதனியாக இனங்காணப்படாது இருந்த போதிலும் ரூபா 8,014,031 ஆன சொத்துக்கள் நிதியத்தின் சொத்துக்களாக வரைவு வருடாந்த அறிக்கை உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2024 இன் வருடாந்த வரைவு அறிக்கை புத்தசாசன நிதியத்தின் சொத்துக்கள் மாத்திரம் உள்ளக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உரிய சொத்துக்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டு குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) | புத்தசாசன நிதியத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட அனுராதபுரம் அநுலா மாவத்தையில் அமைந்துள்ள சுபசிங்க வளவ்வ மற்றும் காணி 2024 யூன் 18 ஆம் திகதி இலக்கம் 94 என்ற சமூக உரித்து உறுதியின் மூலம் அநுராதபுரம் தூபாராம விகாரைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2024 ஆம் வருடாந்த அறிக்கையில் நிதியல்லாச் சொத்துக்கள் அறிக்கையில் செயலாற்றலின் கீழ் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய காணி மற்றும் வளவ நிதியத்தின் சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் அறிக்கையில் சுபசிங்க வளவ்வ மற்றும் காணியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான தகவல்களை உள்ளடக்கி செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | புத்தசாசன நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் 15 வருடங்கள் முழுவதும் சுனாமி உதவியாக முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,384,796 ஆன உரித்தான மீதி புத்தசாசன நிதியக் கணக்கில் செலவு வைக்குமாறு 89 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆளுகைச் சபையின் பரிந்துரையின் பிரகாரம் உரிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதியச் சட்டத்தின் 11(அ) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகளை நிர்வாக மயப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களை நியமிக்கப்படல் வேண்டும். | செயலாளர், கணக்காளர் மற்றும் ஏனைய பதவியணியினருக்காக புத்தசாசன அமைச்சின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புத்தசாசன நிதியத்திற்காக | சட்டத்திற்கு உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதுடன் கணக்கு நடவடிக்கை தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம் பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிரந்தரமாக ஒரு பதவிக்காக மாத்திரம் ஆட்சேர்க்கப்பட்டதுடன் ஏனைய பதவிகளுக்காக புத்தசாசன அமைச்சின் உத்தியோகத்தர்கள் இருவர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் இன்னுமொரு உத்தியோகத்தர் நிதியத்தின் கடமைகள் கையளிக்கப்பட்டதுடன் நிதியத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு நியமிக்கும் போதும் கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிவுள்ள உத்தியோகத்தர் நியமிக்கப்படாமையும், கணக்காளரின் சரியாக வழிகாட்டல் கிடைக்காமையின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியாத நிலைமை காணப்படுகின்றமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் மற்ற பதவியணியினர் நிரந்தரமாக ஆட்சேர்த்துக் கொள்ள வேண்டி ஏற்படுமாயின் வருடாந்த வருமானத்தில் (ரூபா 70 மில்லியன் அளவில்) 10 சதவீதத்திற்கு அதிகமான தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்த வேண்டி ஏற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வேலை நேரக் கணக்காளர் ஒருவர் காணப்படாமை மற்றும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அறிவுள்ள உத்தியோகத்தர் உத்தியோகத்தர் காணப்படாமையின் காரணமாக இந்த கணக்குகள் தொடர்பான அறிக்கை தயாரிப்பதற்கு முடியாது இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அனுபவம் உள்ள உத்தியோகத்தரை நிதியத்திற்கு நிமித்தல் வேண்டும். |
| (உ) | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கெப்பகரு மாணவர் உதவி முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் சாமநேர பிக்குகள் மற்றும் மாணவர் தசசில் மாதாவன் 1000 பிக்குகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 2,000 வீதம் மாணவர் உதவி வழங்கும் நிகழ்ச்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த நிகழ்சித் திட்டம் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சனபதிபதி நிதியத்தில் பெருவெனாக் கல்வி பயிலுகின்ற சாமநேரு பிக்குகள் மற்றும் சில்மாதாக்களுக்காக 2024 மே மாதம் முதல் ரூபா 6,000 மாதாந்தம் மாணவர் உதவித் தொகையை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டமையால் அந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கண்டறிந்து அந்த புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நலன்கள் கிடைக்காத பிக்குகளுக்காக மாத்திரம் இந்த செயற்திட்டத்தின் கீழ் மாணவர் உதவித் தொகை வழங்குவதைக் கவனத்தில் கொள்ளும் வகையில் அல்லது அவருக்கு இரண்டு மாணவர் உதவி கிடைக்காத வகையில் உறுதிப்படுத்திய பின்னர் மாணவர் உதவித் தொகை செலுத்துவதற்காக செயற்திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தமையும் அதன் பிரகாரம் 92 ஆவது | ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அந்த முறையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிர்வாக சபைக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் படி 2025 யூலை மாதம் முதல் மீண்டும் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிராமணக் கோவையின் நிதிப்பிரமாணம் 138(2) இன் பிரகாரம் ஏதாவது கொடுப்பனவைக் காரணமாகக் கொண்டு காணப்படுகின்ற நிதியாண்டுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகையை விஞ்சாத வகையில் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் உரிய பேரேட்டில் குறிப்பிடப்படுவதை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரால் உறுதிப்படுத்திய பின்னர் உரிய சான்றுபடுத்தல் மேற்கொள்ள வேண்டி இருந்த போதிலும் நிதியத்தின் கொடுப்பனவு பிரதான பேரேட்டில் உரிய கணக்குகள் குறிப்பிடப்படாது இருந்த போது கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு உரிய பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புக்கள் போன்றவை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய நிதிக்கூற்றுக்கள், பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புக்கள் தயாரிக்க வேண்டி இருந்தமையும் முழுநேரக் கணக்காளர் காணப்படாமை மற்றும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அனுபவமுள்ள உத்தியோகத்தர் காணப்படாமையின் காரணமாக இந்த கணக்குகள் தொடர்பான அறிக்கை தயாரிப்பதற்கு முடியாது இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஏதாவது கொடுப்பனவுகளுக்கான காரணங்களால் தற்போதைய நிதியாண்டிற்காக நிதியேற்பாடு செய்யப்பட்ட தொகையை விஞ்சாத வகையிலும், உரிய பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் உரிய சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 139(8) இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளும் ஒன்றுக்கு ஒன்று குறித்துரைத்த பதிவேடுகளில் குறிப்பிடப்படுகின்றமை மற்றும் முறையான பிரகாரம் கணக்கீடு செய்யப்படுகின்றமையை செலுத்துகின்ற உத்தியோகத்தரால் உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டி இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் உரிய செலவினங்கள் பிரதான பேரேட்டில் குறிப்பிடப்படாது இருக்கும் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு உரிய பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புக்கள் போன்றவை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய நிதிக்கூற்றுக்கள், பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புக்கள் தயாரிக்க வேண்டி இருந்தமையும் முழுநேரக் கணக்காளர் காணப்படாமை மற்றும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அனுபவமுள்ள உத்தியோகத்தர் காணப்படாமையின் காரணமாக இந்த கணக்குகள் தொடர்பான அறிக்கை தயாரிப்பதற்கு முடியாது இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஒவ்வொரு கொடுப்பனவுகளும் குறித்த பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளமை மற்றும் முறையான பிரகாரம் உரிய பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2024 ஆம் ஆண்டிற்காக நிதியத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அமுல்படுத்தப்படாமை மற்றும் நிதியத்தின் நடவடிக்கைகளை நிர்வாக மயப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம் நியமித்து நிதியத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு மனிதவளம் முகாமைத்துவம் முறையான பிரகாரம் ஈடுபடுத்தப்படாமையின் காரணமாக நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான முறையான திட்டம் மற்றும் முறைமை அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது அந்த குறைபாடுகளை சரி செய்து செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியத்தின் பதவியணியினர் போதியளவில் இல்லாமையின் காரணமாக இந்த குறைபாடுகள் ஏற்பட்டமையால் எதிர்காலத்தில் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முன்னுரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முறையான திட்டம் மற்றும் முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் நிதிச் சட்ட நிதியம் ஒன்றின் வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் பின்னர் புத்தசாசன நிதியத்தின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இறுதிக் கணக்குகள் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் இதுவரையில் 2020, 2021 இன் இறுதி அறிக்கைக்காக அமைச்சரவை தீர்மானம் கிடைத்துள்ளதுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் 2024 ஆம் ஆண்டின் வரைவு செயலாற்றல் அறிக்கையில் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக இணங்குகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விடயங்கள் தொடர்பாக இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் வரைவு செயலாற்றல் அறிக்கையில் இணக்க பதிவேடுகளின் குறைபாடுகளைச் சரி செய்து திருத்துவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட ஆய்வு அறிக்கை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் அறிக்கையின் படிவத்தின் பிரகாரம் சரியான தகவல்களை உள்ளடக்கி அறிக்கை தயாரித்தல் வேண்டும். |

(i) நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த ரீதியில் சமர்ப்பிப்பட்டமைக்கு இணங்கும் என

(ii) நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாகப் பேணிச் செல்லப்படுகின்றது என

(iii) நிதி அதிகாரம் நிறுவனத்தில் கையளிக்கப்பட்டதன் கீழ் இணங்குகின்றது என

(iv) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரித்தல் தொடர்பாக இணங்குகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

(v) வருடாந்த மதிப்பீடு தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்டத்திணைக்களத்திற்கு குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.

(vi) வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்று குறித்துரைத்த திகதியில் திறைசேரிகள் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என.

(vii) குறித்துரைத்த திகதியில் வங்கி இணக்கக் கூற்று தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.

(viii) கடந்த ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விநியோகிக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளது என.

(ix) இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் கொம்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.

| | | | |
|---|---|---|---|
| (x) | இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக இணைப்பு உத்தியோகத்தரை நியமித்து அந்த உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் கொம்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது என. | | |
| (இ) | 2024 ஆம் ஆண்டின் வரைவு வருடாந்த அறிக்கையின் செயலாற்றல் குறிகாட்டிகளின் கீழ் புத்தசாசன நிதியத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2024 இல் திருத்தப்பட்ட வரைவு வருடாந்த அறிக்கையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் அறிக்கையின் படிவத்தின் பிரகாரம் சரியான தகவல்களை உள்ளடக்கி அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2015 யூலை 07 ஆந் திகதி நடைபெற்ற புத்தசாசன நிதியத்தின் 74 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தின் மூலம் நிதியத்திற்காக 11 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பதவியணியினர் ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2024 ஆம் ஆண்டின் வரைவு வருடாந்த அறிக்கையில் 06 ஆம் அத்தியாயத்தின் 6.1 – ஆளணி எண்ணிக்கை முகாமைத்துவத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 08 பேர்களாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வரைவு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பிழையானதாகும். | 2024 இல் திருத்தப்பட்ட வரைவு வருடாந்த அறிக்கை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் அறிக்கையின் கடிதத்தின் பிரகாரம் சரியான தகவல்களை உள்ளடக்கி அறிக்கை தயாரித்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) இன் பிரகாரம் எந்த ஒரு நிதியத்தினதும் நிர்வாக அதிகாரியினால் வருடாந்தம் எதிர்வரும் ஆண்டின் பாதீடு அந்த நிதி ஆண்டின் நோக்கங்களுக்கு இணங்க தயாரித்து உரிய அமைச்சின் செயலாளரினதும், கௌரவ அமைச்சரினதும் அங்கீகாரத்தைப் பெற்று நடப்பாண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக | 2025 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு அமைச்சின் மூலம் தேசிய வரவு செலவுத் திட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பாதீட்டை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டி இருந்ததுடன் அதன் பிரதி ஒன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். எனினும் நிதியத்தின் மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு 2024 மே 22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.